கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

STC No.46/2023

நாள்.27.02.2026 ம.சா.2 திருமதி.செல்வரெஜி

க/பெ திரு.செல்வின்துரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) என் கணவர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி அறிவிப்பில் காசோலை பெற்ற போது நான் உடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகார் மனுவிலும், காசோலை தொடர்பான பரிவர்த்தனை எனக்கு தெரியும் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சிகள் பட்டியலில் எனது பெயரை, என் கணவர் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு மறுப்பு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு யாரால் அனுப்பப்பட்டது என்ன சங்கதிகள் கூறி அனுப்பப்பட்டது என்றால் சதிஸ் என்பவரின் வழக்கறிஞரால் அனுப்பப்பட்டது, மேற்படி அறிவிப்பில் எதிரி பணம் தரவேண்டியது இல்லை என கூறி அறிவிப்பு அனுப்பப்பட்டது.

2) நான் தாக்கல் செய்த சீர்த்திருத்த புகாரிலும் காசோலை பரிவர்த்தனையின்போது நான் எனது கணவர் உடன் இருந்தேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான், அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனது கணவர் மீது பணகுடி காவல் நிலையத்தில் எதிரி அளித்த புகார் விவரம் தெரியுமா என்றால் சரிதான்(சாட்சி பின்னர் மறுத்து தெரியாது என கூறுகிறார்). எனது மகனின் மீது எதிரி அளித்த புகார் விவரம் தெரியுமா என்றால் தெரியும், எதிரி பணம் கொடுப்பதாக பேச்சுவார்த்தை நடைபெற்றது அப்போது எதிரியால் புகார் அளிக்கப்பட்டது. மேற்படி புகார் மனு விசாரணையில் எனது மகன் ஆஜரானாரா என்றால் ஆஜரானார், நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு கூறி புகார் முடித்துவைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மேற்படி புகார் மனுவில் எனது மகன் ஆஜராகாமல் இருந்ததாகவும், எனது கணவர் தான் வாக்குமூலம் அளித்ததாக உள்ளது என்றால் ஆவணம் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எனது கணவர் தான் வாக்குமூலம் அளித்தார். எனது கணவரும், எனது மகனும் சேர்ந்து இவ்வழக்கு எதிரியை மிரட்டி பணம் பறிக்கும்நோக்கத்தோடு இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் சமயம் எதிரியை கொலை மிரட்டல் கொடுத்ததாக புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்காக



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.27 01:49:39 +0530

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மீதும், தீலிப்பன் என்பவர் மீதும் பணகுடி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் தீலிப்பன் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் என்கணவர் மீது புகார் அளித்துள்ளார். தீலிப்பன் மீதும், என் கணவர் மீதும் புகார் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியும் தற்போது எனக்கு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) தீலிப் குமார் எதிரியுடைய தம்பியின் சொத்தை வாங்கி தருவதாக கூறி ரூ.1 இலட்சம் பேசி காசோலை வாங்கினார் என்றால் சரியல்ல. மேற்படி தீலிப் குமார் எதிரி உடைய தம்பியிடம் பேசிய ஆடியோ ரெக்காடிங் வைத்து தான் என் கணவர் மீதும், தீலிப் குமார் மீதும் பணகுடி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் தீலிப் குமார் பற்றி தெரியாது, என் கணவர் மீது புகார் அளித்தார். என்னுடைய மகன் பெயர் என்ன என்றால் வினோத் ஆகும். மேற்படி வினோத் மீது கொலை மிரட்டல் கொடுத்து அசிங்கமாக பேசியதாக புகார் அளிக்கப்பட்டு அது புகார் மனு ஏற்பு இரசீது எண்.1053/2022 என பதியப்பட்டது என்றால் சரிதான், ஆனால் வினோத் அசிங்கமாக பேசவில்லை, பணம் சம்மந்தமாக பேசினோம்.

4) இவ்வழக்கு புகார் மனுவை பற்றி எனக்கு எவ்வித விவரமும் தெரியாது என்றால் தெரியும். இவ்வழக்கில் சீர்த்திருத்த மனுவை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சீர்த்திருத்தம் செய்யப்பட்ட புகார் மனுவில் காசோலை சம்மந்தமான விவரங்கள் எனக்கு தெரியும் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் முன்னர் புகார் மனுவில் காசோலை சம்மந்தமான விவரங்கள் எனக்கு தெரியும் என புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலை சம்மந்தமான பரிவர்த்தனைகள் தீலிப் குமார் என்பவருக்கும், எதிரிக்கு சம்மந்தப்பட்டது என்றாலும், என் கணவருக்கும், எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

5) தீலிப் குமார் என்பவர் மீது எவ்வளவு வழக்குகள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தீலிப் குமார் மீது நடவடிக்கை எடுப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் இல்லை.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.27 01:49:44 +0530